★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆவணி 12 ஜூலை 18 இதழ் 196

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29-8-83

## கூட்டணி எம். பி. க்கள் பார்த்தசாரதியைச் சந்தித்தனர்

(கொழும்பு)

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும், இந்தியப் பிரதம மந்திரியின் விசேட பிரதிநிதியான திரு. ஜி. பார்த்தசாரதியை தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் நேற்றுச் சந்தித்து உரையாடினர்.

கொழும்பிலுள்ள 'இந்தியா ஹவுஸ்' என்ற இல்லத்தில் சுமார் ஒருமணி நேரம் இச் சந்திப்பு நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. உ. அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம், கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம், கிளிநொச்சி எம். பி, திரு. வி. ஆனந்தசங்கரி, திருகோணமலை எம், பி. திரு. இரா சம்பந்தன், யாழ். மாவட்டசபைத் தலைவர் திரு. ந. இராசேந்திரன் ஆகியோர் இச்சந்திப்பின் போது கலந்து கொண்டனர்,

தமிழ் மக்களின் பல்வேறு பிரச்னைகள் குறித்தும் இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து இரு கார்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள் கொழும்பு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (மா)

## "பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியரை அக்டோபர் 31 வரைமீண்டும் வேலைக்கு அழைக்கக்கூடாது"

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்துள்ள அரசாங்க ஊழியர்களை அக்டோபர் மாத 31ம் தேதி வரைமீண்டும்வேலைக்கு அழைக்கக்கூடாது என்றும் அவர்களுக்கு 3 மாதச் சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்றும், ஜனாதிபதியிடம் கோரியுள்ளோம்"**

யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆசிரியர் சங்க காரியாலயத்தில், பாதிக்கப்பட்ட ஊழியர் மத்தியில் பேசிய யாழ். பிரஜைகள் சங்க செயலாளர்சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:

''பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியருக்கு உடன் தேவைக்கு சிறிய குடும்பத்திற்கு 3000 ரூபாவும், பெரியகுடும்பத்திற்கு 5000 ரூபாவும் வழங்க வேண்டுமென்றும், கோரியிருக்கிறோம்.

''நிவாரணப் படிவங்களும், பத்திரங்களும் தங்களுக்கு கிடைக்கவில்லையென பாதிக்கப்பட்டோர், புகார் செய்துள்ளனர். இப்படிவங்கள் உடனடியாக அவர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில், இப்படிவங்களை பாதிக்கப்பட்டோர்பெற ஏற்பாடு செய்யவேண்டும்'' என்றார். (க)

## பாதிக்கப்பட்ட அரசஊழியருக்கு இளைப்பாற்றுத் திட்டம்

### இணைப்புக்குழு யோசனை

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களின் இளைப்பாற்றுத் திட்டம் பற்றி பரிசீலிப்பது என்று பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழுவின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழுவின் செயற்குழுக் கூட்டம் யாழ் நகரிலுள்ள வடமாகாண ஆசிரியர் சங்க அலுவலகத்தில் தலைவர் கோ. இராஜசிங்கம் தலைமையில் கூடியது. கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

''பாதிக்கப்பட்ட தனியார் துறை வர்த்தக வியாபார நிறுவன ஊழியர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வ நிதியிலிருந்து நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடப்படுவதுடன் அதுசம்பந்தமான உரிய நடவடிக்கை எடுப்பது,

''தனியார்துறை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அவ்வூழியர்களுக்கு நிவாரணம் தேடிக்கொடுப்பது.''

''பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்கள் அவ்வத் திணை

(4-ம் பக்கம் பார்க்க)

## இவர்களுக்கு இன்று நிவாரணப் பொருட்கள்

(கரவெட்டி)

அண்மையில் இடம்பெற்ற கலவரத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தங்களது இல்லங்களிலும், உறவினர்களது இல்லங்களிலும் தங்கியுள்ளோர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தற்காலிக நிவாரணம் வழங்க கரவெட்டிஉதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்தற்காலிக நிவாரணப் பொருட்களான அரிசி, மா, சீனி என்பன இன்று முதல் கட்டைவேலி, நெல்லியடி,

(4-ம் பக்கம் பார்க்க)

### செய்தித் தணிக்கை

கடந்த மாதம் 20-ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## வாஜ்பாய் - 'நவம்' புதுடில்லியில் சந்திப்பு

சென்னை, ஆக. 28

இலங்கை தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான திரு. வி. என். நவரத்தினம் பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்தார்.

இச் சந்திப்பு டில்லியில் நிகழ்ந்தது. திரு. வாஜ்பாயிடம் இலங்கைத் தமிழர் பிரச்னையை திரு. நவரத்தினம் விரிவாக எடுத்துக்கூறியதாக தெரிவிக்கப்பட்டது.

திரு. வீ. என். நவரத்தினம் பாரதீய ஜனதாக்கட்சி செயலாளர் திரு. எல். கே. அத்வாணியையும் சந்தித்து உரையாற்றினார்.

திரு. வாஜ்பாய் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக கூட்டங்கள் சிலவற்றை இந்தியாவில் நடத்த முடிவுசெய்துள்ளார் என்று தெரியவருகின்றது. (கி)

## குருநகர் முகாமிற்கு மேலும் 75 அகதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகப் பொறுப்பிலுள்ள குருநகர் அகதிகள் முகாமிற்கு மேலும் 75 அகதிகள் மாத்தளை மாவட்டத்திலிருந்து வந்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் சுகவீன முற்றுள்ளனர். இவர்களுக்கு வேண்டிய உதவிகளை யாழ். லயன்ஸ் கழகம், செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கத்தோலிக்க கன்னியாஸ்திரிகளும் கூட்டாகச் சேர்ந்து அளித்து வருகின்றனர்.

இந்த அகதிகளுக்கு பாய்கள், தலையணைகள், அலுமினியப் பாத்திரங்கள், சாறம், துவாய், அரிசி, பருப்பு, மரக்

(4-ம் பக்கம் பார்க்க)

## "இந்தியா செல்லும் பயணிகளுக்கு யாழ்ப்பாணத்தில் 'விசா' வழங்குக!"

### ஜனார்த்தனன் கோரிக்கை

(சென்னை)

கனடா செல்லும் வழியில் கட்டுநாயக்காவில் வைத்து கைது செய்யப்பட்ட 24 தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்தியப்பிரதமரின் விசேட தூதர் திரு. ஜி. பார்த்தசாரதியை தமிழகமேல் சபை உறுப்பினர் திரு. இரா. ஜனார்த்தனன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவசரதந்தி ஒன்றின்மூலம் இந்தவேண்டுகோளை விடுத்துள்ள திரு. ஜனார்த்தனன், இத்தந்தியை இலங்கைக்கான பாரதத்தூதுவரின் முகவரிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மாஸ்கோ மூலம் கனடாவின் மொன்றியால் நகரத்துக்கு செல்லவிருந்த 24 தமிழ் இளைஞர்கள் போலியான விபரங்களைக்கொண்டிருந்த கடவுச்சீட்டுக்களை வைத்திருந்ததாக கட்டுநாயக்கா விமானநிலையத்திற்கு அருகிலுள்ள ஹோட்டல் ஒன்றில் அண்மையில் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த 24 இளைஞர்களும் உண்மையான பயணிகள் என்றும் வேண்டுமென்று இவர்கள் மீது குற்றம்சுமத்தியிருப்பதாகவும் திரு. ஜனார்த்தனன் தனது தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியா வருபவர்கள் விசாக்களை பெறுவதற்கு கொழும்பு வருவது பயங்கரமாக இருப்பதால் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் விசாவழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் தந்திமூலம் கேட்டுள்ளார். (கு)

I. C. M. A

Section A, B, and Part I Nov' 83 Exams

RAPID REVISION COURSES

(Covering Full Syllabus With Involved Problems)

இன்று ஆரம்பம்

29-8-83 காலை 8-30

இடம்: 250, Stanley Road, Jaffna.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

குறிப்பு: 1. எமது பிரதம விரிவுரையாளர்கள் V. கருணாநிதி, S. கதிரமலைப்பிள்ளை, K. அருள்ரூபன் ஆகியோர் எதிர்பாராமல்இடம் பெற்ற அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்டமையால் வகுப்புக்களை தாமதித்து தொடங்குவதற்கு வருந்துகின்றோம்.
2. கொழும்பு R. R. I. மாணவர்கள் தமது கல்வியை இங்கு தொடர்ந்து பயில அனுமதிக்கப்படுவர்.
3. குறிப்பிட்ட காலத்திற்குள் முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்பட்டு, 10 வருட வினுக்களுக்கு விடையளிக்கப்படும்.

Sponsored By:

RAPID RESULTS INSTITUTE

8387

## அமைச்சர்கள் சிறில்மத்தியு, காமினி, தொண்டாவுடன் பார்த்தசாரதி சந்திப்பு!

### பேச்சுக்கள் தொடருகின்றன

(கொழும்பு)

இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியாக இலங்கை வந்திருக்கும் திரு. கோபால சுவாமி பார்த்தசாரதி நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக இலங்கை அரசியல் பிரமுகர்களைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர்.

இந்த இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியு, காணி அமைச்சர்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

K. K. S. கொடிகாமம் 769 இலக்க பஸ் பாதை சுற்றுடலில்/ பளையில் ரூபா ஐம்பதினாயிரம் மட்டில் உள்ள வீடு கட்டக்கூடிய காணி தேவை. விலை விபரத்துடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல. 8399 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 8399

## WANTED

well connected respectable Jaffna Hindu vellala parents seek Doctor, Accountant, Engineer working abroad or already arranged to go abroad, same cast, under 32 yrs, height about 5' 7" for tall fair slim pretty daughter age 25 Accounts part qualified, working. Dowry worth above 25 lakhs. Modern spacious upstair house close Jaffna town residental interior safe area. Jewellery and cash worth around 3 lakhs for suitable Doctor. Horescope details early to: Advt. No. 8406 C/o Eelanadu, Jaffna. 8406

## விற்பனைக்கு

நல்லூரில் புதியவீடு, மின்சார, தண்ணீர் வசதி (மோட்டர்) யுடன் விற்பனைக்கு உண்டு. வர்த்தகர்களுக்கு நல்லதோர் இடம். தொடர்புகளுக்கு எம். பி. பரமேஷ், இல. 55 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 8377

சாவகச்சேரியில் புகையிரத நிலையத்திற்கும் சிவன் கோவிலுக்கும் இடையில் $2\frac{1}{2}$ பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: பொ. ஜெயராசா, சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி அல்லது ''பரம்ஸ்'' நவீனசந்தை, சாவகச்சேரி. 8404

## விற்பனைக்கு

E N 9700 தொடர் இலக்க A 50. கார் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு. சிறிவள்ளி கபே, சாவகச்சேரி 8405

சுதுமலை மத்தியில் உபதபால் நிலையத்துக்கும் பாடசாலைக்கும்மிகஅருகில் தாவடி-மானிப்பாய் பிரதான வீதியில் $1\frac{1}{2}$பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி: இ. சத்தீஸ்வரன், ப. நோ. கூ. சங்கம், சுன்னுகம். 8400

யாழ்ப்பாணம் ஆனந்தன் வடலி வீதியில் உள்ள 1 லாச்சம் $7\frac{1}{2}$ குளிவளவு, 1200 சதுர அடி வீடு, நல்ல தண்ணீர் கிணறு, மின்சாரம் ஆகிய வசதிகளுடன் (ரூபா200000/-) லட்சத்துக்கு மேல் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 2, சென்பற்றிக் ரேட், றெக்கிளமேசன், யாழ்ப்பாணம். 8366

யாழ். மாநகரசபை எல்லைக்குள் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 6 பரப்புக் காணி கிணற்றுடன் 3 துண்டுகளாக விற்பனைக்கு உண்டு. மு. இராசலிங்கம், 66/16 இந்து மகளிர் வீதி, கந்தர்மடம். 8390

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### கேள்வி அறிவித்தல்

இப்பல்கலைக்கழக வளவிலுள்ள சில தறிக்காத மரங்கள் 02-09-1983ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் பல்கலைக்கழக வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏலத்தில் வெற்றி பெறுவோர் உடன் பணத்தைச் செலுத்தி மரத்தைஅகற்றுதல்வேண்டும்.

**பதிவாளர்.**

யாழ்ப்பாணம்,
1983-08-25. (8396)

## சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது) சுன்னுகம்

### அறிவித்தல்

சுன்னுகம் ப. நோ. கூ. சங்கத்தில் கேள்விப்பத்திர மூலம் 4000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், வெற்று பரல்களும், கழிவு சீனி, கழிவு மாவும், குறுணல் அரிசியும் விற்பனைக்கு இருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-ம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-ம் மீளளிப்பு வைப்புப்பணமாக சங்கத்தில் செலுத்தி, சங்க வேலைநாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி;- 02-09-83 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி.

**பொது முகாமையாளர்,**
சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம்,
சுன்னுகம்.
27-08-83. 8408

## ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விண்ணப்ப முடிவு திகதியை பின்போடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விண்ணப்ப முடிவுத் திகதியை மேலும் ஒருமாதத்திற்குப்பின் போடுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சினைக் கோரியுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஆசிரிய கலாசாலை விண்ணப்பத்தினை அனுப்புவதிலுள்ள கஷ்டங்களை எடுத்து விளக்கி, விண்ணப்ப முடிவுத் திகதியினை ஒருமாதத்திற்குப் பின்போடுமாறு கோரியுள்ளார். (வெ)

## கம்பியூட்டர் நிகழ்ச்சி முறைப் பயிற்சி நெறி

● BASIC ● COBOL ● R. P. G. II

I. D. P. M. பகுதி I, II
(LON-EXAM) டிசெம் 83, ஜூன் 84.

மேலும் வபரங்கட்கு:-

**Auto Cool Engineers**
(சாந்தி சினிமா அருகாமை)
யாழ்ப்பாணம். 8407

## அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983

### முக்கிய அறிவித்தல்

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களால் யாழ். மாவட்டம் வந்துள்ள அகதிகள் யாரேனும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வரும் படிவங்களையோ அல்லது அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983 மூலம் விநியோகிக்கப்பட்டு வரும் படிவங்களையோ இதுவரை நிரப்பிக் கொடுக்கப்படாமல் இருப்பின் தயவு செய்து இவ்விரண்டு படிவங்களையும் கீழ்காணும் காரியாலயங்களில் ஒன்றில் உடனடியாகப் பெற்று நிரப்பிக் கொடுக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

1. யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. காரியாலயம்
2. யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் காரியாலயம்.

இயக்குனர் சபை
வை. எம். சி. ஏ. கட்டிடம்
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

8379

## அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983

### முக்கிய அறிவித்தல்

**கலவரங்களில் இறந்த அல்லது காணுமல் போனவர்களின் தகவல்**

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களில் இறந்தவர்களினதும் அல்லது காணுமல் போய் இற்றைவரைக்கும் கண்டுபிடிக்கப்படாதவர்களைப் பற்றிய தகவல்களும் அவசியம் தேவைப்படுகின்றது. தயவு செய்து கீழ் கண்ட விபரங்களை உடன் எமக்கு அறிவிக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

1. முழுப்பெயர்
2. விலாசம் (யாழ்ப்பாணத்தில்)
3. கலவரத்தின்போது இருந்த விலாசம்
4. ஆண்/பெண்
5. வயது
6. செய்த தொழில்
7. அத்தாட்சிகள் இருப்பின் விபரம்;

இயக்குனர் சபை,
**வை. எம். சி. ஏ. கட்டிடம்,**
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(8380)

## நிரந்தர வைப்புகட்கான அதீத வட்டிச்சலுகை

**36 o/o**

கடைசித்தினம்
**30-8-83**

# தமிழர் நிதியம்

## நிதி நிறுவனம்

கைத்தொழில் அதிபர்களே!

★ உங்கள் உற்பத்திப் பொருள்களை நியாய விலைக்கு வாங்கி
★ அவற்றை உள்ளூர்த்தேவைக்கேற்ப சந்தைப்படுத்தி
★ களஞ்சிய வசதியோடு இடத்துக்கிடம் பொருள்களை எடுத்துச்சென்று,
★ மூலதன முடங்கலைத் தவிர்த்து, வேண்டிய கடன்வசதிகள்வழங்கி ஊக்குவிக்க

எமது நிறுவனம்

**ஒழுங்குமுறை வர்த்தகத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது**

பாதிப்புற்ற கைத்தொழில்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு, திட்டமிடல், இயந்திர அமைப்பு, கடன்வசதி ஆகியவற்றை நாம் சலுகை அடிப்படையில் வழங்குகிறோம்.

விபரங்கட்கு:-

**தமிழர் நிதியம் நிதி நிறுவனம்**
140, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
(மனோகரா சினிமா அண்மையில்)
தொலை பேசி: 22437

# மங்களகரமான திறப்பு விழா

நிகழும் ருதிரோற்காரி வருடம் ஆவணித் திங்கள் 29-ம் நாள் காலை (29-08-1983) 6-04 முதல் 6-38 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

# ★ ராதிகா ஜுவல்லர்ஸ் ★

என்ற ஸ்தாபனம் 222, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளதால் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ பவுண் ★ பொன் ★ வெள்ளி

வாங்கவும் விற்கவும் எம்மையே நாடுங்கள்.

**ராதிகா ஜுவல்லர்ஸ்**

அன்புடன் ஸ்தாபனத்தார்
222, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (8409)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00
கமலஹாசன்-ஸ்ரீதேவி
**கல்யாண ராமன்**

**றீகல்** கடைசி வாரம்
10-30. 2-00,
**GIRL FROM INDIA**

**சாந்தி** யாழ். நகர்
காலை 10-30, 2-30
— எம். ஜி. ஆர். —
**"எங்க வீட்டு பிள்ளை"**
புதிய வண்ணப் பிரதி

**லிடோ** (யாழ். நகர்)
10-30, 1-30, 3-30
Sean Connery 007
**YOU LIVE ONLY TWICE**
(Colour - Scope)

**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ். **துணை**
(கலர்)

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30
கமலஹாசன் - அம்பிகா
**சகலகலா வல்லவன்**

## அம்பாள்மகோற்சவம் இன்றுஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் - வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான அம்பாள் மகோற்சவம் இன்று திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அடுத்த மாதம் 6-ம் திகதி தேர்த் திருவிழாவும் 7-ம் திகதி காலை 10-30க்கு தீர்த்தமும் நடைபெறும். காலை திருவிழா தினமும் 9மணிக்கும், மாலை திருவிழா தினமும் 4 மணிக்கும் நடைபெறும்.

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
**மூடுபனி**

**மனோகரா**
(யாழ்நகர்)
தினசரி. 10-30, 2-30, 6-30
சிவாஜி — K.R.விஜயா
**தர்மராஜா**
(கலர்)

**ராஜா** (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
(கலர்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
27-8-83 சனி முதல்
10-30, 2-30, 6-00
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**
புதியபிரதி)

**வெளிநாடு செல்கிறீர்களா?**

உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.

விபரங்கட்கு:-

TFC **த பிறெண்ஸ் கம்பனி லிமிட்டெட்**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680

## ஹோம் பிறெண்ஸ் லிமிட்.

யாழ். புடவை வியாபாரிகளுக்கு
ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறெண்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறெண்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடைஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்குண்டு.

I. ✯ சாயமூட்டிய பொப்பிளின்
II. ✯ வெள்ளை பொப்பிளின்
III. ✯ பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**ஹோம் பிறெண்ஸ் லிமிட்.**
82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(போன்: 24310)

தலைமைக் காரியாலயம்:
**ஹோம் பிறெண்ஸ் லிமிட்.**
463, காலி வீதி, கொழும்பு-3.

**விசா இல்லாமல்**

சிங்கப்பூர், லண்டன், கனடா, மலேசியா, கொங்கொங், சம்பியா அல்லது பாகாமா
ஆகிய நாடுகளுக்கு செல்ல

✯ விமான டிக்கட்
✯ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
வங்கியின் கட்டணத்தில்
✯ விமான ஆசன பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைக்கும்
இன்றே நாடுங்கள்

## மக்கிறேன் டிரவல்ஸ் லிமிட்டட்

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ZAMBIAN AIRWAYS பிரதான விற்பனைப் பிரதிநிதி)
General Sales Agents
த. பெ. எண்: 92 போன்: 24154

## இன்றைய பலன்

ஆவணி 13ம் திகதி
திங்கட்கிழமை
(29—8—83)

மேடம்:- நெஞ்சமும் புண்ணாகி நெடுமூச்சும், வெளிக்கிளம்பும், தொழிலாலே தொல்லை தோன்றும், அடிசறுக்கும் நிகழ்ச்சி இடம் பெறும், ஆணவத்தை அடக்கின் அமைதிக்கு இடமுண்டு.

இடபம்:- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம், கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு, தாய் வழி ஆதரவு தாரளமாகக் கிடைக்கும், ஆசிரியர்கள்போற்றப்பவர்.

மிதுனம்:- பணமுடையினால் பெரிதும் வேதனைப்படுவீர்கள், கடன்தொல்லைகளும் அதிகரிக்கும். நம்பி இருந்த இடத்திலிருந்து ஏமாற்றமான செய்தி கிடைக்கும்.

கடகம்:- எப்பக்கம் திரும்பினாலும் ஆதரவு தருவதற்க்கு அன்பர்கள் முன்வருவார்கள், பொதுமக்கள் மத்தியில் நல்ல மதிப்பு ஏற்படலாம், தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும்பங்குண்டு.

சிங்கம்:- கன்னல்மொழி பேசி காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், கவர்ச்சிகரமான சம்பவங்களுக்கும் இடமுண்டு, வெளியூரில் இருந்து நண்பர் ஒருவரின் வருகை மகிழ்சியைத்தரும்.

கன்னி:- கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் வேதனைப்படுவீர்கள், கௌரவத்தை பாதிக்கக் கூடிய சம்பவங்கள் இடம் பெறும், பணம் பலவழிகளிலும் செலவாகும்.

துலாம்!- களஸ்திரவழியால் அதிக நன்மையுண்டு, வணிகத்துறையில் அதிக முன்னேற்றம் காணப்படுகின்றது. அயலவர்களின் அன்பு உங்களைப் பரவசப்படுத்தும்.

விருச்சிகம்:- பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள், அதனால் விபரீதங்கள் விளையக்கூடும், மறைமுக எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டிய நிலை உருவாகும்.

தனு: தங்கக்குணம் மேலிடும், தங்க மதிப்புக் கிடைக்கும், இனத்தவர்களுடன் தொடர்பு பெருகும், உழைப்பினால் பலனும் உற்சாகமும் பெருகும், தந்தை ஆதரவுண்டு.

மகரம்: தரும காரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள், சுற்றுடனுல் மதிப்பு உயரும், கடற்றொழிலில் ஈடுபடுவோர் போற்றத்தக்க முன்னேற்றத்தை அடைவர்.

கும்பம்: இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும், அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும், கலைஞர்கள் போற்றப்படுவார்கள், வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் உண்டு.

மீனம்: மோத வரும் பாதையில் மோசடிகள் நடக்கும், சகோதர வழியால் சஞ்சலம் ஏற்படலாம், குடும்பத்தில் சிறு பிணி வட்டாடும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

**யாழ்ப்பாணம் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)**

**கட்டிடம் வாடகைக்கு விடல்**

இல 127, கே.கே. எஸ். வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் முதலாம் மாடியில் 3000 சதுர அடிப்பரப்புள்ள இடம் வாடகைக்கு உண்டு. அதை முழுமையாகவோ அல்லது 750 சதுர அடி கொண்ட துண்டுகளாகவோ வாடகைக்கு விடப்படும். மலசல கூட குளியலறை வசதிகளும் உண்டு. வாடகைக்கு எடுக்க விரும்புவோர் ரூபா 25/- செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பதில் பொமுகாமையாளர்
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
27-8-83 8403

**யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி**

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

## குறொஸ் ட்ரவல் சேவிசஸ்[பிறை]லிமிட்.

**05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.**

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்

தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!

**CROSS TRAVEL SERVICES (PVT)LTD.** Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor
BUSSTAND CENTRE ROAD JAFFNA. Phone 22040—22065

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## மணிவாக்கு

''தெய்வத்தால் ஆகாதது ஒன்றுமில்லை''

# நமது நோக்கு

## திக்கற்றவருக்குத் தெய்வமே துணை

நமது முன்னோர் தெய்வத்தை நம்பினார்கள். அவர்கள் வாழ்வு தெய்வத்தோடு ஒன்றியிருந்தது. அன்று அவர்கள் ஒரு பொல்லாப்புமில்லாமல் வாழ்ந்தார்கள்.

இன்று நாம் தெய்வத்தினின்றும் வெகு தொலைவுக்கு விலகிவிட்டோமென்பது நாம் இன்று அனுபவிக்கும் துன்பங்களிலிருந்து துலாம்பரமாகத் தெளிவாகியுள்ளது. வேண்டத்தக்கதை அறிபவனும் வேண்ட முழுதும் தருபவனுமாகிய இறைவனை நாம் மறந்துவிட்டோம்.

நினைந்து வேண்டுவார் சிலரும் எதை வேண்டிக் கொள்கின்றனரென்று பார்ப்போமானால் அது வெறும் சுயநலமாகத்தான் இருக்கும். 'காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம்வேண்டும்' என்று பாரதிகேட்கின்றானென்றால் அது தனக்கு மட்டுமாக இருக்கமுடியாது. தனக்கென்று ஒரு சாண் நிலமில்லாதஒருவன் தான் பிறந்த நாடாயிருந்தாலும் கூட அவன் உரிமை பாராட்ட அருகதையில்லாதவனே.

'கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று முன்னோரின் இறுக்கமான எச்சரிக்கையின் பயனாக ஊரெங்கும் கோவில்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆயினும் இவற்றில் எத்தனை துலங்குகின்றன. இப்போது உற்சவகாலம். உற்சவம் நடக்கும் கோவில்கள் எத்தனை? மிகுதி ஏன் தூங்குகின்றன? நடைபெறும் விழாக்களும் தூய்மையின் அடிப்படையில் இடம்பெறுகின்றனவா?

கூடிவாழ்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கோவில்களே மனிதன் குலைந்து போவதற்குக் காலாய் அமைகின்றன. தெய்வ நம்பிக்கையும் பயமுமில்லாததாலேயே இவ்வித நிலை ஏற்படுகின்றது என்று துணிந்து கூறலாம். சில கோவில்கள் தேடுவாரற்றுக் கிடப்பதும், சில கோவில் திருவிழாக்களில் போட்டா போட்டியுடன் கேளிக்கைகள் இடம்பெறுவதும், தர்மத்தை விலைகூறி ஈட்டும் பணத்தைக் கொண்டு கோவில்பணிகள் ஆற்றுவதும் தெய்வ பயமின்மையையே எடுத்துக் கூறுகின்றன. சில கடவுளரை மனிதன் நீதிமன்றுக்கும் கொண்டுவந்து நிறுத்திவிடுகின்றான்!

மனிதன் மாறிவிட்டான். சமுதாய மாற்றங்கள் இயல்பானவை; தவிர்க்கமுடியாதவை. ஆனால் இவ்வித பயங்கரமாற்றங்கள் அழிவுக்கே நம்மை இட்டுச் செல்லும்; நம் சந்ததியைப் பூண்டோடு அழித்துவிடும். இம்மாற்றங்கள் நம் முற்சந்ததியிலிருந்து நம்மை வெகுவாகப் பிரித்துவிட்டிருக்கிறது- ஆம், தெய்வநம்பிக்கையிலிருந்து, தெய்வபயத்திலிருந்து நம்மை வெகுதூரம் தள்ளிவைத்திருக்கிறது.

இன்று நாம் அனுபவிக்கும் இன்னல்களுக்கெல்லாம் காரணம் இதுதான்.

இன்னல்களிலிருந்து நாம் விடுபடவும், துன்பமின்றி எந்நாளும் இன்பமே பெற்று வாழும் வகையில் நாம் ஒரு புதிய சமுதாயத்தைக்காணவும் தெய்வம் தெளிதலும், தெளிந்து மதித்தலும் வேண்டும். தெய்வத்தை மதித்து வணங்குவோமானால் திக்கற்ற நிலையிலிருக்கும் எமக்கு நிச்சயம் கைகொடுக்கும். 'வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்' என்கிறார் நாவுக்கரசனார். நமக்கு இன்று வேண்டுவதென்ன? என்ன வேண்டும் என்பது பற்றி முன்னர் தெரியாதிருந்தவர்களும் இன்று அதுபற்றி நன்றாகத் தெரிந்திருக்கின்றனர். இதுவும் தெய்வச் செயலே.

இன்று சிந்தையால் ஒன்றுபட்டுள்ள நாம், தெய்வ அருளின் மூலம் நமக்கு வேண்டியதனைப் பெறுவதற்கும் ஒன்றுபட்ட சிந்தையுடன் தெய்வத்தை வேண்டி நிற்போம். எமது கூட்டுவேண்டுதல் ஒலி காட்டாறாக அவன் காதில் பாயட்டும்.

## நாடுபோற்றும் நல்லவர்

அமரர் வைத்தியலிங்கம் சுப்பிரமணியம் சிவநெறிமாண்பும் சீரிய தமிழ்ப் பண்பாடும் கொண்டவர். இணுவையூரைப் பிறப்பிடமாகக்கொண்டவர். 33 ஆண்டுகள் ஆசிரிய சேவையில் கடமையாற்றிய இவர் 30 ஆண்டுகள் அதிபராக பணியாற்றினார். இவரது நினைவாக பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய ஆத்ம சாந்தி உரை:

இணுவில், கல்வி செல்வங்களாலும், பலதுறைப்பட்ட கலைகளாலும் தனிச்சிறப்பு வாய்ந்து தனக்கிணையில்லாதது இணையில்லாத இணுவிலில் வித்துவ சிரோரத்தினமாய் பேரறிஞரின் பெருமதிப்புக்குரியவராய் விளங்கியவர் திரு. அம்பிகைபாகர் அவர்கள் குறிப்பிட்ட வித்துவ சிரோரத்தினம் அவர்களின் பேரனார் அமரர் திரு. வை. சுப்பிரமணியசிவம் அவர்கள் சிவத்தின் சிவகதியை முன்னிட்டு சிவத்தின், மனைவி மக்கள் சகோதரர்கள் சிவத்தோடு தொடர்புபட்டவர்கள் யாவரும், ஆத்ம சாந்தி அமைக என்று எல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்பார்களாக.

சி. கணபதிப்பிள்ளை

## இவர்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலோலி, உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதற்கென விண்ணப்பித்த பாதிக்கப் பட்டவர்களுக்கு விசேட ''நுகர்ச்சிப்பொருள் அட்டை'' உதவி அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு கூட்டுறவுச்சங்கக் கிளைக்கும் அவ்வப்பகுதிக்குரியவர் விபரமும் அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரணப் பொருட்கள் விபரமும் வழங்கப்பட்டிருக்கும். பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் பொருட்களைப் பெற்ற பின்னர் அப்பட்டியலில் கையொப்பமிடும்படி கேட்கப்படுகிறார்கள். பின்வரும் கிளைகளிலேயே இப்பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

### இராமேஸ்வரம் மீனவர் பிரச்னை:

## இலங்கை அரசிடம் இந்தியா கவலை தெரிவித்தது!

(கொழும்பு)

இராமேஸ்வரம் கடல் பிராந்தியத்தில் மீன் பிடிக்கும் இந்திய மீனவர்கள் துன்புறுத்தப்படுவதாக இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கவலை தெரிவித்துள்ளது.

இந்திய அரசு சார்பில் இந்திய உயர் ஸ்தானிகர் திரு. சத்வால் இவ்விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளைச் சந்தித்து இந்தியாவின் கவலையை வெளியிட்டார்.

புதுடில்லியிலிருந்து மத்திய அரசாங்கம் இந்திய உயர் ஸ்தானிகர் மூலமாக இதுபற்றித் தெரிவித்திருப்பதாவது: இந்தியாவின் கடல் பிராந்தியத்தில் இராமேஸ்வரம் மீனவர்களின் மீன்பிடித் தொழில் குறுக்கிடுவதை இலங்கை கடற்படையினரோ அல்லது ஏனைய பாதுகாப்புப்படையினரோ தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இராமேஸ்வரம் மீனவர்களை வழக்கம்போல அவர்களது கடமையைச் செய்ய அனுமதிக்கவேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் தலையிட்டு பிரச்னைகள் ஏழாதவாறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

கடந்த வாரம் இராமேஸ்வரத்தில் 12 மீனவ சங்கங்கள் இலங்கைக் கடல் பிராந்தியத்துக்கருகில் தாம் துன்புறுத்தப்படுவதாகக் கூறி ஆர்ப்பாட்டம் நடத்தின. அவை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இலங்கை வந்துள்ள இந்தியப்பிரதமரின் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி ஆகியோரையும் சந்தித்து தமது பிரச்னைகளைக் கூறின என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## இன்று

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் ஞான வீர மாதர் சங்கத்தின் பாலர் பாடசாலையை இலங்கையிலிருக்கும் கனடியத் தூதுவர் இன்று திங்கட்கிழமை பிற்பகல் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ். மாவட்ட மங்கையர் கழகத்தின் ஆதரவில் இப்பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. (மா)

## குருநகர் முகாமிற்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கறிவகைகள் தேவைப்படுகின்றது.

இந்தப் பொருட்களை கொடுத்துதவ விரும்புபவர்கள் குருநகர் முகாமிற்குச் சென்று, அங்குள்ள லயன்ஸ் கழகப் பிரமுகர்களிடம் கையளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

குருநகர் முகாமில் தற்போது 200-க்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியுள்ளனர்.

## பாதிக்கப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களங்களுக்கு, தங்களது நிலையை அறிவிப்பதற்கு ஒரே மாதிரியான பதிலை அளிப்பதற்கு வழிவகுத்துக் கொடுப்பது, பாதிக்கப்பட்ட அரசாங்க, தனியார் கூட்டுத்தாபன ஊழியர்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இணைப்புக் குழுவுடன் ஆலோசித்து மேற்கொள்ளுவது.''

## இந்திய செயற்கைக் கோள்

[புதுடில்லி]

இந்தியாவின் செயற்கைக் கோளான 'இன்சார்ட் ஒன்று-பி' அமெரிக்க விண்வெளிக் கலமான 'சலஞ்சரில்' விண்வெளிக்கு அனுப்பிவைக்கப்படும்.

நாளை செவ்வாய்க்கிழமை இந்திய நேரப்படி காலை 11-45 மணிக்கு 'சலஞ்சர்' இந்திய செயற்கைக்கோளை விண்வெளி கொண்டு செல்லும்.

இந்திய செயற்கைக்கோள் 'இன்சார்-ஒன்று-பி' இந்தியாவின் வெளி ஆராய்ச்சிக்குப் பெருமளவு உதவும் என்று விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (கி)

## ஆனைக்கோட்டை மக்கள் உதவி

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை 8-ம் வட்டார மக்கள் வடபகுதிக்கு அகதிகளாக வந்துள்ளவர்களுக்கு உதவுமுகமாக ஐயாயிரத்து முந்நூறு ரூபாவை யாழ். அகதிகள் புனர்வாழ்வு திட்ட நிதிக் குழுவின் தலைவர் டாக்டர் யோகு பசுபதியிடம் கையளித்துள்ளனர்.

அரிசி உடுபுடவைகளும் இவர்கள் இந்த அகதிகளுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

## கிருஷ்ண ஜெயந்தி

[புலோலி]

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இம்மாதம் 31-ம் திகதி ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறவுள்ளது. பருத்தித்துறை மந்திகை பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா சமித்தியிலும், அன்றைய தினம் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நடைபெறும்.

## தமிழ் டாக்டர்களுக்கு அழைப்பு

(பண்டத்தரிப்பு)

கலவரங்களினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக யாழ்ப்பாணத்திலுள்ள தமதுசொந்த ஊர்களுக்கு திரும்பிய அநுராதபுரம் அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர்களை உடனடியாக அங்குவந்து கடமையை பொறுப்பேற்குமாறு தந்திமூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## 3 நாட்கள் ஹர்த்தாலின் பின்....

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் 3 நாட்கள் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டபின்னர் நேற்றுமுன் தினம் முதல் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது.

## 'அமிர்' பிறந்ததினம்

(சுழிபுரம்)

எதிர்க்கட்சி முதல்வர், திரு. அ. அமிர்தலிங்கத்தின் பிறந்த தினம் கடந்த சனிக்கிழமை மிகவும் அமைதியான முறையில் அவரது சொந்தக் கிராமமான பண்ணாகம் விசவத்தனை முருகன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளுடன் கொண்டாடப்பட்டது.

## அமைச்சர்கள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. காமினிதிசநாயக்கா ஆகியோருடன் நடத்தப்பட்டது. வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஹமீத்தும் இப் பேச்சுக்களில் கலந்துகொண்டார்.

திரு. பார்த்தசாரதி கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும். கிராமிய சிறுகைத் தொழில் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமானைச் சந்தித்து உரையாடினார்.

இதேவேளை தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கத்துடனும் திரு. ஜி. பார்த்தசாரதி தமது பேச்சுக்களின் விபரங்களை இருதடவைகள்தொடர்பு கொண்டு தெரிவித்தார் என்று அறியப்படுகின்றது.

திரு. அ. அமிர்தலிங்கம், தமிழர்விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமொன்றை கொழும்பில் கூட்டியிருந்தார். இக்கூட்டத்தில் திரு. பார்த்தசாரதிக்கும், இலங்கை அரசியல் பிரமுகர்களுக்குமிடையில் இடம்பெற்றுவரும் பேச்சுக்கள் பற்றி அவர் ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (கி)

## மறவேன் நின் கருணை

செல்வமும் கல்விதானும்
சேர்ந்திடும் பதியாய் உள்ள
நல்லையில் இருந்தே யார்க்கும்
நலன்செயும் முருகா நின்றுள்
தொல்லைகள் தீர்க்கும் என்றே
துணையெனக் கொண்டேன் நின்றன்
எல்லையில் கருணை தன்னை
என்றுமே மறத்தல் செய்யேன்.

—புங்கை. ச. அமிர்தராஜ்

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்29-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.

## மரண அறிவித்தல்

### முருகேசு தாமோதரம்பிள்ளை

கொற்றாவத்தை, பொலிகண்டியைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் முருகேசு தாமோதரம்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், மலேசியா பாலசிங்கம், திருநாவுக்கரசு, ஆனந்தன், மலாயன் றேடியோ உரிமையாளர் நவரத்தினம், சதாசிவம், நடராஜா, பத்மநாதன் (ஜெர்மனி), கமலாதேவி, நவமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலக்சுமி, சத்யா, மகாலட்சுமி, கமலா, நடராஜா, சதாசிவம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (29 - 8 - 83) காலை 10 மணிக்கு 36, பொற்பதி இல்லத்திலிருந்து தகனக்கிரிகைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திரு. T. நவரத்தினம்,
29-8-83 ''மலாயன் றேடியோ சர்விஸ்'',
(8415) 45, கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.